# தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்
## விரிவாக்கக் கல்வி இயக்ககம், சென்னை
## ICAR - வேளாண்மை அறிவியல் நிலையம், நாமக்கல் - 637 002

இதழ் 5 | **செய்தி மடல்** | எண் : 2

**ஜூலை - செப்டம்பர் 2019**



**முதன்மை ஆசிரியர்**

முனைவர் **டி. ராமசாமி**
இயக்குநர்,
விரிவாக்கக் கல்வி இயக்ககம்

**ஆசிரியர்**

முனைவர் **ந. அகிலா**
முதுநிலை விஞ்ஞானி
பேராசிரியர் மற்றும் தலைவர்

**இணை ஆசிரியர்**

முனைவர் **சு. சத்யா**
விஞ்ஞானி / உதவிப் பேராசிரியர்
மண்ணியல் மற்றும்
வேளாண் வேதியியல்

**ஆசிரியர் குழு**

முனைவர் **சி. ஷர்மிளா பாரதி**
முனைவர் **பெ. முருகன்**
திரு. **கோ.ரா. புஷ்பநாதன்**
மருத்துவர் **சி. கதிர்வேலன்**
முனைவர் **சி. பால்பாண்டி**
முனைவர் **மா. டெய்சி**




நாமக்கல் வேளாண்மை அறிவியல் நிலையம் விவசாயிகள், இளைஞர்கள், சுய உதவிக்குழுக்கள் மற்றும் களப்பணியாளர்களுக்கு ஆராய்ச்சிக் கூடத்திலிருந்து வெளிவரும் புதிய தொழில்நுட்பங்களை வயல் வெளிசோதனை, முதல்நிலை செயல்விளக்கம், விழிப்புணர்வு முகாம் மற்றும் அறிவுரைகள் வழங்குதல் மூலம் கொண்டு சேர்ப்பதில் முக்கிய பங்கு வகிக்கின்றது. விவசாயிகள், பண்ணை மகளிர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் ஆகியோர்களின் அறிவியல் சார்ந்த தொழில்நுட்பங்களின் பயன்பாட்டுத்திறனை மேம்படுத்தும் பொருட்டு வேளாண்மை அறிவியல் நிலையம் பல்வேறு வகையான பயிற்சிகள், விழிப்புணர்வு முகாம்கள், கண்காட்சிகள், செயல்விளக்கங்கள் மற்றும் வயல் விழாவினை நடத்தியது. ஜுலை முதல் செப்டம்பர் 2019 வரை வேளாண்மை அறிவியல் நிலையம் செய்த முக்கிய பணிகள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன.

### வேளாண்மை அறிவியல் நிலையம் பெற்ற விருதுகள்



நாமக்கல் வேளாண்மை அறிவியல் நிலையம் 2019 - ஆம் ஆண்டு ஜுலை மாதம் 16.07.2019-ஆம் தேதியன்று புதுடெல்லியில் உள்ள தேசிய வேளாண்மை அறிவியல் அமைப்பு நிறுவனத்தில் நடைபெற்ற இந்திய வேளாண்மை ஆராய்ச்சி கழகத்தின் 91-ஆம் நிறுவன நாள் விழாவில் இந்திய வேளாண்மை ஆராய்ச்சி கழக தொழில்நுட்ப பயன்பாட்டு நிறுவனங்களின் மண்டலம் 10-ன், 2018-ஆம் ஆண்டிற்கான பண்டிட் தீன் தயாள் உபத்யாய இராஷ்டிரிய கிருஷி விக்யான் புரஸ்கார் என்ற சிறந்த வேளாண்மை நிலையத்திற்கான விருதினை பெற்றது. இவ்விருதினை தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் சி. பாலசந்திரன் அவர்கள் மற்றும் வேளாண்மை அறிவியல் நிலைய முதுநிலை விஞ்ஞானி மற்றும் தலைவர் முனைவர் ந. அகிலா அவர்கள், இந்திய அரசின் வேளாண்மை மற்றும் விவசாய நல அமைச்சக அமைச்சர் மாண்புமிகு நரேந்திர சிங் தோமர் அவர்களிடமிருந்து பெற்றனர். மேலும் அத்தினம் நாமக்கல் வேளாண்மை அறிவியல் நிலைய விவசாயியான நாமகிரிப்பேட்டை வட்டாரம், அரியாக்கவுண்டம்பட்டி கிராமத்தை சார்ந்த திரு. பி. சரவணன் அவர்களுக்கு ஹல்தார் ஆர்கானிக் விவசாயி என்ற விருதினை இந்திய வேளாண்மை ஆராய்ச்சி கழக இயக்குநர் முனைவர் டி. மகோபத்தரா அவர்கள் வழங்கினார்.

### ஜல் சக்தி அபியான் கிஸான் மேளா - I



ஜல் சக்தி அபியான் கிஸான் மேளா - I இராசிபுரம் வட்டாரத்திலுள்ள சுஜிதா திருமண மண்டபத்தில் 17.08.2019 அன்று கொண்டாடப்பட்டது. அதில் ஜல் சக்தி அபியான் திட்டத்தின் நாமக்கல் மாவட்ட பொறுப்பு அலுவலர்களான ஆயுஷ் அமைச்சகத்தின் முதன்மை செயலர் திரு. பி.என். ரஞ்சித்குமார் மற்றும் துணை அதிகாரிகளும் கலந்து கொண்டு ஜல் சக்தி அபியான் குறித்து எடுத்துரைத்தார்கள்.



இந்திய மண் மற்றும் நீர் மேலாண்மை நிறுவன முதன்மை விஞ்ஞானி முனைவர் எஸ். மணிவண்ணன், திருச்சி அன்பில் தர்மலிங்கம் வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவன முனைவர் எஸ். சோமசுந்தரம் அவர்கள் கலந்து கொண்டு நீர் மேலாண்மை குறித்த தொழில்நுட்ப உரையாற்றினார்கள். பல்வேறு கல்லூரியை சார்ந்த மாணவ,

மாணவியர்கள் கலந்து கொண்டு நீர் மேலாண்மை குறித்த கலைநிகழ்ச்சியினை நடத்தினார்கள். மாண்புமிகு. பாராளுமன்ற உறுப்பினர் திரு. ஏ.கே.பி. சின்ராஜ் அவர்கள் கலந்து கொண்டு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு சான்றிதழ் வழங்கினார். 10 அரங்குகளில் நீர் மேலாண்மை குறித்த கண்காட்சியும் அமைக்கப்பட்டிருந்தது. 597 விவசாயிகள், 422 மாணவ, மாணவியர்கள், 52 களப்பணியாளர்கள் என மொத்தமாக 1071 நபர்கள் நாமக்கல் மாவட்டத்தின் 5 வட்டாரங்களிலிருந்து கலந்து கொண்டனர்.

**ஜல் சக்தி அபியான் கிஸான் மேளா - II**





ஜல் சக்தி அபியான் கிஸான் மேளா - II 03.09.2019 அன்று பாவலர் மா. முத்துசாமி நகராட்சி மண்டபத்தில் நடத்தப்பட்டது. நாமக்கல் மாவட்ட ஆட்சியர் திருமதி. எம். ஆசியா மரியம் அவர்கள் நீர் மேலாண்மை குறித்த மாணவ, மாணவியர்களின் விழிப்புணர்வு பேரணியை துவக்கி வைத்தார். அவர்களுடன் பஞ்சாயத் ராஜ் உதவி செயலர் மருத்துவர். எஸ். அனு, நகராட்சி ஆணையர் திருமதி. ஜெயந்தி ஆகியோர் உடனிருந்தனர். அதனைத் தொடர்ந்து மருத்துவர் எஸ். அனு அவர்கள் நீர் மேலாண்மை குறித்த கருத்தரங்கு மற்றும் கண்காட்சியினை துவக்கி வைத்தார். நாமக்கல் மாவட்ட மாண்புமிகு பாராளுமன்ற உறுப்பினர் திரு. ஏ.கே.பி. சின்ராஜ் அவர்கள் நீர் மேலாண்மை முறைகளை சிறப்பாக பயன்படுத்தி வரும் விவசாயிகளை பாராட்டி பரிசுகளை வழங்கினார். நாமக்கல் மாவட்ட வேளாண்மைத்துறை இணை இயக்குநர் திரு. ஜே. சேகர், முன்னோடி வங்கி மேலாளர் திரு. எஸ். முத்தரசு அவர்கள் கலந்து கொண்டு நீர் மேலாண்மை முறைகள் குறித்து எடுத்துரைத்தார்கள். கோயம்புத்தூர் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக நீர் மேலாண்மைத்துறை இயக்குநர் (ஓய்வு) முனைவர் பி.ஜே. பாண்டியன் மற்றும் மண்டல மையம், வேளாண்மை பொறியியல் மைய முதன்மை விஞ்ஞானி முனைவர் டி. செந்தில்குமார் அவர்கள் கலந்து கொண்டு நீர் மேலாண்மை குறித்த தொழில்நுட்ப உரையாற்றினார்கள். பல்வேறு கல்லூரியை சார்ந்த மாணவ, மாணவியர்கள் நீர் மேலாண்மை முறை குறித்த கலைநிகழ்ச்சிகளை நடத்தினார்கள். 10 அரங்குகளில் நீர் மேலாண்மை குறித்த கண்காட்சியும் வைக்கப்பட்டிருந்தது. நாமக்கல் மாவட்டத்தை சார்ந்த 4 வாட்டாரங்களிலிருந்து 706 விவசாயிகளும் 442 மாணவர்களும் 34 களப்பணியாளர்களும் மொத்தம் 1182 நபர்கள் கலந்து கொண்டனர்.

இது தவிர 85 ஜல் சக்தி அபியான் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் 6203 பயனாளிகளுக்கு நடத்தப்பட்டது. வீடு மற்றும் வயல்வெளிகளில் மழைநீர் சேகரிப்பு அமைப்புகள் அமைத்தல், நிலத்தடி நீரை சேமித்தல், நீர் மறுசுழற்சி முறைகள் குறித்த உரைகள் வழங்கப்பட்டது. நீர் மேலாண்மை குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்திய மாணவ, மாணவியர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது. கிராம சபா கூட்டம், விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம், ஜல் சக்தி அபியான் கூட்ட அறிக்கை கூட்டத்தில் கலந்து கொண்டு நீர் மேலாண்மை முறைகள் குறித்து விவாதிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து மருத்துவர் எஸ். அனு அவர்கள் வடவத்தூர் மற்றும் ஜம்புமடை கிராமத்தில் மாவட்ட அளவிலான பருவநிலை மாற்றங்களுக்குகேற்ற வேளாண்மை முனைப்பு திட்டத்தின் கீழ் விவசாய பண்ணைக் குட்டைகள், வரப்பு உயர்த்தப்பட்ட வயல்கள், கோடை உழவு செய்தல் மற்றும் பசுந்தாழ் உரங்கள் விதைத்தல் ஆகிய தொழில்நுட்பங்களின் பயன்கள் குறித்து விவசாயிகளிடையே கலந்துரையாடினார்.





**தேசிய கால்நடை நோய் தடுப்புத்திட்டம் குறித்த நேரடி ஒளிபரப்பு**



நாமக்கல் வேளாண்மை அறிவியல் நிலையம் 11.09.2019 அன்று தேசிய கால்நடை நோய் தடுப்புத்திட்டம் குறித்த நேரடி ஒலிபரப்பு நிகழ்ச்சியை வேளாண்மை அறிவியல் நிலையத்தில் நடத்தியது. இந்நிகழ்ச்சியில் 72 கால்நடை வளர்ப்போர், கால்நடை பராமரிப்புத்துறை கால்நடை உதவியாளர், உதவி இயக்குநர், ஆவின் இயக்குநர் ஆகியோர்கள் கலந்து கொண்டனர். மேலும் 9 கால்நடைகளுக்கு கோமாரி நோய் மற்றும் 32 கால்நடைகளுக்கு தடுப்பூசிகளும் போடப்பட்டு, நோய் மேலாண்மை குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சியும் நடத்தப்பட்டது.

**மரம் நடும் விழா**



நாமக்கல் வேளாண்மை அறிவியல் நிலையத்தின் தத்து கிராமமான ஒண்டிக்கடையில் 17.09.2019 அன்று மரம் நடும் விழா மற்றும் ரபி பருவ விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியில் வேளாண்மை அறிவியல் நிலையத்துடன் வட்டார மற்றும் உள்ளாட்சி துறையின் திட்ட மேம்பாட்டு அலுவலர்கள் கலந்து கொண்டு மரம் நடுவதின் முக்கியத்துவம், ஒருமுறை பயன்படும் நெகிழி பொருட்களின்

பயன்பாட்டினை குறைத்தல் பற்றிய கருத்துகளை விவசாயிகளிடையே எடுத்துரைத்தார்கள். 205 விவசாயிகளுக்கு 1017 மரக்கன்றுகள் வழங்கப்பட்டு விவசாயிகளின் நிலங்களில் அத்தினம் நடப்பட்டது.

### மாவட்ட அளவிலான மக்காச்சோள படைப்புழு மேலாண்மை குறித்த கிஸான் மேளா



நாமக்கல் வேளாண்மை அறிவியல் நிலையம், நாமக்கல் மாவட்ட வேளாண்மை துறை மற்றும் கோயம்புத்தூர் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் இணைந்து 06.08.2019 அன்று பாவலர் மா. முத்துசாமி நகராட்சி மண்டபத்தில் மாவட்ட அளவிலான மக்காச்சோள படைப்புழு மேலாண்மை என்ற தலைப்பில் கிஸான் மேளாவை நடத்தியது. இந்நிகழ்ச்சியினை நாமக்கல் மாவட்ட ஆட்சியர் திருமதி. எம். ஆசியா மரியம் அவர்கள் துவக்கி வைத்து விவசாயிகளை அறிவியல் சார்ந்த மக்காச்சோள படைப்புழு மேலாண்மை முறைகளை கடைபிடிக்க வேண்டுமென வலியுறுத்தினார். மேலும் இந்நிகழ்ச்சியில் கோயம்புத்தூர் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக பூச்சியியல் துறை இயக்குநர் முனைவர் கே. பிரபாகர், பூச்சியியல் துறை பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் என். சாத்தையா, ஏத்தாப்பூர் மரவள்ளி மற்றும் ஆமணக்கு ஆராய்ச்சி நிலைய இணைப்பேராசிரியர் முனைவர் வி. கீதா மற்றும் நாமக்கல் மாவட்ட இணை இயக்குநர் திரு. ஜே. சேகர் அவர்கள் கலந்து கொண்டு படைப்புழு தாக்குதலும் மேலாண்மை முறைகளும் குறித்து விரிவாக தொழில்நுட்ப உரையாற்றினார்கள். மொத்தமாக 225 விவசாயிகள் மற்றும் 76 களப்பணியாளர்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

### பார்த்தீனியம் ஒழிப்பு குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி



14-ஆவது பார்த்தீனியம் ஒழிப்பு குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி நாமக்கல் வேளாண்மை அறிவியல் நிலையத்தால் வேளாண்மை அறிவியல் நிலைய வளாகம், சுற்றியுள்ள கிராமங்கள் மற்றும் அருகிலுள்ள பள்ளிகளில் 20.08.2019, 21.08.2019 ஆகிய தினங்களில் அனுசரிக்கப்பட்டது. மொத்தமாக 115 விவசாயிகளும், 130 மாணவர்களும் இந்நிகழ்ச்சியின் மூலம் பயனடைந்தனர்.

### தூய்மை இந்தியா குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி



வேளாண்மை அறிவியல் நிலையம் 11.09.2019, 12.09.2019 மற்றும் 18.09.2019 ஆகிய தினங்களில் விவசாயிகள் மற்றும் மாணவர்களிடையே தூய்மை இந்தியா குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சியியை வேளாண்மை அறிவியல் நிலையத்தில் நடத்தியது. வேளாண்மை அறிவியல் நிலைய வளாகம் மற்றும் சுற்றியுள்ள பகுதிகளை தூய்மை செய்தது. 20.09.2019 அன்று செவ்வந்திப்பட்டி கிராமத்திலும், 23.09.2019 அன்று தோளூர் அரசு உயர்நிலைப் பள்ளியிலும் தூய்மை இந்தியா குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சியினை நடத்தியது.

### கோழி வளர்ப்பு குறித்த ஊரக இளைஞர்களுக்கான திறன் மேம்பாட்டு பயிற்சி



புதுக்கோட்டையிலுள்ள ஸ்டாமின் நிறுவனத்தின் நிதியுதவியுடன் ஊரக இளைஞர்களுக்கான திறன் மேம்பாட்டு பயிற்சியினை வேளாண்மை அறிவியல் நிலையம் "கோழி வளர்ப்பு மற்றும் மேலாண்மை" என்ற தலைப்பில் 05.08.2019 முதல் 10.08.2019 வரை நடத்தியது. மொத்தமாக 28 இளைஞர்கள் கலந்து கொண்டு கோழி வளர்ப்பு சம்பந்தமான பயிற்சிகளை கற்றுணர்ந்தனர்.

### தேசிய மீன் வளர்ப்போர் தினம்



நாமக்கல் வேளாண்மை அறிவியல் நிலையம் நாமக்கல் மற்றும் மேட்டூரில் அமைந்துள்ள மீன் வளத்துறையுடன் இணைந்து 10.07.2019 அன்று தேசிய மீன் வளர்ப்போர் தினத்தை கொண்டாடியது. 28 மீன் வளர்க்கும் விவசாயிகள் கலந்து கொண்டு நாமக்கல் மாவட்டத்தில் மீன் வளர்ப்பிலுள்ள சவால்கள் குறித்து எடுத்துரைத்தார்கள். அதில் சிறப்பாக மீன் வளர்க்கும் தொழிலை கடைபிடிக்கும் விவசாயிகள் அத்தருணத்தில் கௌரவிக்கப்பட்டார்கள். இந்நிகழ்ச்சியில் நாமக்கல் மாவட்ட வேளாண்மைத் துறை துணை இயக்குநர் மற்றும் வனத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

### கண்காட்சி அமைத்தல்



தொழில்நுட்பங்கள் குறித்து பயிற்சியில் எடுத்துரைக்கப்பட்டது.



### மண்டல மாதாந்திர பணிமனைக் கூட்டம்



வேளாண்மை அறிவியல் நிலையம் மூன்று மண்டல மாதாந்திர பணிமனைக்கூட்டத்தை 16.07.2019, 20.08.2019 மற்றும் 10.09.2019 அன்று 131 களப்பணியபளர்களுக்கு நடத்தியது. நாமக்கல் மாவட்டத்தின் பல்வேறு வட்டாரங்களிலுள்ள முக்கிய பிரச்சினைகளும் அதற்குரிய தீர்வுகள் குறித்தும் விவாதிக்கப்பட்டது.



### மண் மற்றும் பாசன நீர் பரிசோதனை மற்றும் மண்வள அட்டை வழங்குதல்



கடந்த ஜூலை 2019 முதல் செப்டம்பர் 2019 வரை, 183 மண் மாதிரிகளும் 119 பாசன நீர் மாதிரிகளும் விவசாயிகளிடமிருந்து கட்டண அடிப்படையில் பெறப்பட்டு, பின்பு பரிசோதனைக்கு செய்யப்பட்டு 183 மண்வள அட்டைகளும் 119 பாசனநீர் வள அட்டைகளும் பரிந்துரைகளுடன் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது.



### கண்டுநர் சுற்றுலா - பட்டறிவு பயணம்



கடந்த ஜூலை - செப்டம்பர் 2019 வேளாண்மை அறிவியல் நிலையத்திற்கு மொத்தமாக 575 பயனாளிகள் (205 விவசாயிகள், 370 கல்லூரி மாணவ, மாணவியர்கள்) பட்டறிவு பயணம் மேற்கொண்டனர். வேளாண்மை அறிவியல் நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள வேளாண் மாதிரி திடல், கால்நடை மற்றும் மீன் வளர்ப்புகேற்ற பண்ணைகள் பற்றிய செயல் விளக்கமும், அறிவியல் நிலையத்தின் செயல்பாடுகள் குறித்த தொழில்நுட்ப உரையும் வழங்கப்பட்டது.





**<u>மேலும் தகவலுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி</u>**

முதுநிலை விஞ்ஞானி, பேராசிரியர் மற்றும் தலைவர்

**ICAR** - வேளாண்மை அறிவியல் நிலையம்

கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும்

ஆராய்ச்சி நிலைய வளாகம், நாமக்கல் - 637 002

அலைபேசி எண் : 04286 - 266650, 266345

இணையதளம் : www.kvknamakkal.com